2002 மார்ச் 14]

29—

மேலாண்மைப் பட்டயப் பயிற்சி

***6274—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டியல் இனம் மற்றும் பழங்குடியினரில் கூட்டுறவு உயர்நிலை மேலாண்மைப் பட்டயப் பயிற்சி முடித்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் அவர்களுக்கு வேலை வழங்கப்படாமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு உடன் வேலை கிடைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவு உயர்நிலை மேலாண்மைப் பட்டயப் பயிற்சி முடித்துத் தேறியுள்ள மாணவர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர். இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரும் அடங்குவர். நடைமுறையில் உள்ள அரசாணைகளின்படி, பதிவு மூப்பு அடிப்படையில், Registration Seniority-படி கூட்டுறவு நிறுவனங்களில் காலிப் பணியிடம் ஏற்படும்போது எல்லாம் இப்பதிவு மூப்புப் பட்டியல் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து பெறப்பட்டு, பணியிடங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கூட்டுறவு உயர்நிலை மேலாண்மைப் பட்டயப் பயிற்சி முடித்துப் பதிவு செய்துள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள், பதிவு மூப்பு அடிப்படையிலே Seniority அடையும்போது அவர்களுக்கும் பணியிடம் வழங்கப்படும்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998 ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறையில், பல்வேறு சங்கங்களில் கூட்டுறவு மேலாண்மைப் பட்டயப் பயிற்சி பெற்றவர்களில் நாடுனர்கள் இல்லை என்ற கருத்தின் அடிப்படையில், அப்படிப்பட்ட பதவிகளை

நிரப்புவதற்காக தனியாக ஒரு பயிற்சி கொடுக்கப்பட வேண்டுமென்று கூட்டுறவுத் துறை மூலமாக விளம்பரம் செய்து, அரசு சார்பிலேயே ஒரு candidate-க்கு 3 ஆயிரம் ரூபாய், மாநிலக் கூட்டுறவு இணையத்தின் சார்பிலே 3 ஆயிரம் ரூபாய் என்று, 6 ஆயிரம் ரூபாய் கொடுத்து, ஏறக்குறைய 210 பேருக்குப் பயிற்சி கொடுத்து, பயிற்சி முடிந்து 3 ஆண்டு காலம் ஆகிறது. அரசாணை எண் 216, நாள் 1-9-1998-ன்படி, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வேலைவாய்ப்பு அலுவலகத்தில், பதிவு மூப்பு அடிப்படையில் நாடுனர்கள் இருந்தால் அவர்களை நியமனம் செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இதுவரையில் நியமனம் செய்யப்படவில்லை என்பதுதான் எங்களுடைய ஆதங்கம். வருகின்ற காலத்திலாவது, இப்படி விசேஷமாக அரசே பணம் செலவழித்து பயிற்சி கொடுத்து, நம்பிக்கையோடு இருக்கின்ற இந்த 210 மேலாண்மை பட்டதாரிகளுக்கு விரைவாக வேலை வழங்குவதற்கு அரசு முயற்சியை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணையின்படி, சீனியாரிட்டிபடி, பதிவு செய்திருக்கிற அத்தனை பேருக்கும் வேலைவாய்ப்பு வழங்குகின்ற பணியினை கூட்டுறவுத் துறை ஏற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கின்ற அந்தக் கோரிக்கைகளையும் — இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இப்போது வந்த பிறகுதான் அந்தப் பணிகளை எல்லாம் விரைவாக முடிக்க, தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறோம். அதன் அடிப்படையிலே உறுப்பினருடைய கோரிக்கையை இந்த அரசு விரைந்து பரிசீலிக்கும்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சியின்போது அரசாணை எண் 44 வாபஸ் பெறப்பட்டு, ஒரு பெரிய பிரச்சினையே தமிழகத்திலே எழுந்தது. அந்த நேரத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட, அரசாணை 44-ஐ மாற்றியது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது, அதைத் திரும்பக் கொண்டுவர வேண்டுமென்று எல்லாம் குரல் கொடுத்தார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கூட நான் கடிதம் எழுதியிருக்கிறேன். சென்ற ஆண்டு சட்டமன்றத்தில் நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது, ஆதிதிராவிட நலத் துறையின் சார்பிலே வழங்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பில், அரசாணை 44-ஐ மீண்டும் கொண்டு வருவோம் என்று சொல்லியிருந்தீர்கள். இன்று மீண்டும் கொண்டுவரப்பட்டு அரசாணை

வழங்கப்பட்டிருக்கிறது என்பதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மீண்டும் அரசாணை எண் 44 கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது அரசாணை எண் 91, நாள் 28-11-2001 என்ற அந்த ஆணையின்படி மீண்டும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த ஆணையின்படிகூட அனைத்துத் துறைகளிலுமிருந்து சரியான தகவலைப் பெற்று பின்னடைவு இடங்களைக் கண்டறிந்து, விரைவாக நிரப்பப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பல துறைகளிலிருந்து இதற்கான தகவல் இதுவரை கிடைக்கவில்லை என்பதுதான் எனக்குக் கிடைத்திருக்கிற தகவல். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிற அந்த உயர்மட்டக் குழுவால் அது அப்போதைக்கப்போது பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, விரைவாக தகவலைப் பெற்று, அந்த அரசாணை 44-ஐ திரும்பக் கொண்டு வந்ததற்கான நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அமைந்ததற்குப் பின்னாலேதான், தாழ்த்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கையை ஒளியிழக்கச் செய்கிற கடந்த ஆட்சி ரத்து செய்த அரசாணை எண் 44-ஐ மீண்டும் கொண்டு வந்து, அந்த backlog vacancy எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதன் அடிப்படையிலே, இப்போது அந்த backlog vacancy-யை எல்லாம், எல்லாத் துறைகளிலும் வேகமாகச் சேகரித்து, அதை மாநில அளவிலே இருக்கிற உயர்மட்டக் குழுவிற்கு அனுப்புகிற அந்தப் பணியிலே ஈடுபட்டிருப்பதைப்போல, கூட்டுறவுத் துறையும் விரைந்து ஈடுபட்டிருக்கிறது. அதற்கான முயற்சியிலே ஈடுபட்டு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அந்த இலட்சியக் கனவை விரைவிலே இந்தக் கூட்டுறவுத் துறை நிறைவேற்றி வைக்கும் என்பதனை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ.கு. தமிழரசன்.

திரு. செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆண்டுக்கு முன்னால், சென்னை, டி.என்.எஸ்.சி. வங்கியில்

தாழ்த்தப்பட்ட மக்களின் இட ஒதுக்கீடு முழுமையாகப் பின்பற்றப்பட வேண்டுமென்பதற்காக, வெற்றிடங்கள் 19 இடங்கள், ஒன்றுக்கு ஒன்று என்ற விகிதத்திலே நிரப்பப்பட்டு, அது கடைசியிலே ஆணை பிறப்பிக்கப்பட்ட நிலையிலே நிறுத்தப்பட்டு, அதற்குப் பின்பு உயர் நீதிமன்றத்திற்குப் போய், உயர் நீதிமன்றத்திலும் உத்தரவு பெற்று அந்தப் பணியாளர்கள் வேலை கைக்கெட்டி வாய்க்குக் கிடைக்கவில்லை என்ற அந்தக் கவலையோடு ஓர் ஆண்டுகாலமாகத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை மீண்டும் பணியிலமர்த்த கூட்டுறவுத் துறை முன்வருமா என்பதை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே 1:1 என்ற அந்த அடிப்படையிலே, அந்தப் பட்டியல் பெறப்பட்டு, இன்டர்வியூ நடத்தப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே, கடந்த ஆட்சியினுடைய அந்த நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக அது நிறுத்தப்பட்டிருக்கிறது. தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற அந்த விவரங்களை இந்த அரசு ஆராயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 30, திரு. ஜே. ஹேமச்சந்திரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

30—

தொழிலாளர்களுக்கு மருத்துவமனை

***5618—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் முந்திரித் தொழிலாளர்களுக்காக மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) எந்தெந்த இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன?

(இ) அவற்றில் எத்தனை தொழிலாளர் வீதம் 1999-2000 ஆம் வருடத்தில் மருத்துவ உதவி பெற்றுள்ளார்கள்?